**செய்தி வெளியீடு எண் : 178** **நாள்: 25.01.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைமை அலுவலகத்தில் இன்று (25.01.2022) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில், இயக்குநர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் உடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள், அனைத்து இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர்கள், தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணையின்படி 2021-2022 எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்படி செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஏற்கனவே சட்டசபையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை விரைந்து செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி விவசாய உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன், ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட ஆணைகளுக்கு இணங்க 24.01.2022 வரை 26,384 விவசாய மின் இணைப்புகள் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு பிரிவுகளின் கீழ் தங்கள் தயார் நிலையை பதிவு செய்துள்ள 60,777 விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர, மீதமிருக்கும், 12,839 விவசாயிகள் அவர்களது தயார் நிலையினை விரைந்து பதிவு செய்வதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 1,00,000 விவசாய மின் இணைப்புகளும் வருகின்ற 31.03.2022-குள் வழங்கப்படும் என மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடெங்கும் 216 துணை மின் நிலையங்கள் நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 152 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இருக்கின்றன. மீதமிருக்கும் 64 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை தேர்வு செய்வதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு மேலாண்மை இயக்குநர் அவர்களிடமிருந்து எழுதப்பட்டிருந்த கடிதத்திற்கு, பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் நிலங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகள்

துரிதப்படுத்தப்பட்டுள்ளன. துணை மின்நிலையங்களை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் அதற்கான ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) கோரக்கூடிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அதிக மின்பளு மற்றும் குறைந்த மின்னழுத்த மின்மாற்றிகளை மாற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட மொத்த இலக்கான 8,905 மின்மாற்றிகளில், 8,221 மின்மாற்றிகளுக்கான பணிகள் (92.3%) நிறைவு பெற்று மின்னூட்டம் செய்யப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சென்னையில் பல இடங்களில் கடந்த மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் பில்லர் பாக்ஸ்கள் பாதுகாப்பு காரணம் கருதி ஆப் செய்து வைக்கப்பட்டன. இதனை தவிர்க்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டு அங்கு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள 1,420 பில்லர் பாக்ஸ்களை தரைமட்டத்திலிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, அவற்றுள் 341 பில்லர் பாக்ஸ்கள் இதுவரை உயர்த்தப்பட்டிருக்கின்றன. மீதமுள்ளவற்றையும் உயர்த்துவதற்கு துரித கதியில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எண்ணூரில் 2,000 மெகாவாட் அளவிற்கு சிறிய அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட்) அதிக எண்ணிக்கையிலான எரிவாயு இயந்திர மின் திட்டங்கள் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.9 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம்-1 ல் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல், ரூ.50 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம்-2 ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல் மற்றும் ரூ.14.54 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல், ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அனல் மின் நிலையம்-2 ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகாநதி நிலக்கரி நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படாத நிலக்கரிக்கு ஈடாக, பரிமாற்று முறையில் 1,000 மெகாவாட் வரை மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளின் நிலையை கேட்டறிந்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தினையும் விரைவாகவும், வேகமாகவும் செயல்படுத்துவதற்கான பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் முன்னெடுத்து வருகிறது என மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**